செய்தி வெளியீட்டு எண்: 293 நாள்: 31.3.2010

## பத்திரிக்கைச் செய்தி

## தமிழ் இணைய மாநாடு 2010 – கோவை

தமிழக அரசின் சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் வரும் சூன் மாதம் 23ம் நாளிலிருந்து 27ம் நாள் வரை நடக்கவிருப்பதை அனைவரும் அறிவோம். இச்செம்மொழி மாநாட்டையொட்டி 3 நாட்கள் உலகத் தமிழ இணைய மாநாடும், உத்ததமம் அமைப்புடன் இணைந்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரான வழிகாட்டலின் படி நடத்தப்படுகிறது. தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் குறித்து தொடர்ந்து சர்வதேச அளவில் நடைபெறும் தமிழ் இணைய மாநாடுகளின் வரிசையில் இது ஒன்பதாவது மாநாடாகும்.

கடந்த தமிழ் இணைய மாநாடுகள் கொலோன், ஜெர்மனி (2009), சிங்கப்பூர் (1997 ,2000, 2004), சென்னை (1999, 2003), கோலாலம்பூர், மலேசியா (2001), சான் பிரான்சிசுகோ, அமெரிக்கா (2002) ஆகிய நாடுகளில் நடைப்பெற்றுள்ளன.

இம்மாநாடு பின்வரும் நான்கு முக்கிய கருத்துகளை மையமாக கொண்டு அமைக்கப்பட உள்ளது.

- இணையத் தமிழ் மற்றும் கணினியில் தமிழின் வளர்ச்சி, அவற்றிலுள்ள வருங்கால வாய்ப்புகள் மற்றும் அவற்றை நிறைவேற்ற தேவையான செயல்திட்டங்கள்.
- செம்மொழி அறிஞர்களோடு தமிழ்க் கணினி வல்லுநர்களையும் இணைத்து செயலாற்றுவது
- இளைய தலைமுறையினருக்கு தமிழ் இணைய ஈடுபாட்டை வளர்ப்பது
- பொது மக்களிடையே தமிழ் இணைய வளர்ச்சியையும், பயன் பாடுகளையும் விளக்குதல்.

இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு தமிழ் இணைய மாநாட்டுக் குழுவின் மூலம் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>மாநாடு கருத்தரங்கம்</u>

இம்மாநாடு கருத்தரங்கம், சமுதாய குழுமம், தமிழ்க் கணினி கண்காட்சி ஆகிய மூன்று சிறப்புக் கூறுகளைக் கொண்ட குழு அளவிலான தமிழ் இணைய மாநாடாக 2010 விளங்கும். தமிழ்க் கணினியம், தமிழ் இணையம் ஆகியவற்றின் அண்மைக்கால முன்னேற்றங்கள், பெருமுயற்சிகளும் குறித்த கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் தீர்வுகளை நோக்கி முன்னேறவும் மாநாட்டு அரங்குகள் விளங்கும். உலகெங்கிலுமிருந்து தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் இம்மாநாட்டில் பங்கேற்க உறுதி செய்துள்ளார்கள். விரிவான விவாதங்களுக்குப் போதுமான நேரம் கிடைக்க ஏதுவாக 350

பேராளர்கள் மாநாட்டில் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது. இது நாள்வரை **200** பங்கேற்பாளர்கள் பதிவு செய்துள்ளனர். **400** கட்டுரை சுருக்கங்கள் பெறப்பெற்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

மின்வழி அருங்காட்சியகம், தமிழ் மரபு சார்ந்த தகவல்களின் தகவல் வங்கி, மின் நூல்கள், ஓலைச்சுவடிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட இணைய அட்டவணை, கூட்டாசிரியர் படைப்பு, தமிழ் விக்கிப்பீடியா, கலைஞர் தமிழ் பேசும் கணினிக் கண் உருவாக்கல் திட்டம் **(Tamil OCR)** தமிழ் இணையப் பல்கலைக் கழகம் வாயிலாகத் தமிழ் கற்பித்தல் போன்ற மேலும் பல கட்டுரைகள் இம்மாநாட்டில் பங்குபெறவுள்ளன

<u>பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்</u>

தமிழகமெங்கும் உள்ள பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கணினித் தூரிகையை கொண்டு கணினி வரைகலை மற்றும் அசைகலை போட்டி பிப்ரவரி திங்கள் **12**ஆம் நாள் நடத்தப்பட்டது. திருக்குறள், பழமொழி, ஆத்திச்சூடி, பாரதியார், பாரதிதாசன், மற்றும் கலைஞரின் சங்கத் தமிழ் பாடல்கள் படக்காட்சியாக வரைகலைப் பதிவு செய்யப்பட்டன. இதில் அனைத்து பள்ளிகளிலிருந்தும் ஏறத்தாழ **8300** மாணவர்கள் பங்குப் பெற்றனர். இப்போட்டிகளின் முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்.

<u>கல்லூரி மாணவர்களுக்கான தமிழ் விக்கிப்பீடியா தகவல் பக்கங்கள் போட்டி</u>

போட்டிகளின் இரண்டாம் கட்டமாக கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் விக்கிப்பீடியா தகவல் பக்கங்கள் வடிவமைக்கும் போட்டி முடிவு செய்யப்பட்டுள்ளது.

விக்கிப்பீடியா என்பது இணையத்தில் இயங்கும் தகவல் களஞ்சியத் திட்டமாகும். கலை, அறிவியல், பொறியியல். மருத்துவம், விளையாட்டு, வேளாண்மை, சட்டம், சித்த மருத்துவம், பல் மருத்துவம், கால்நடை மருத்துவம், பல தொழில் நுட்பப் பயிலகம் என அனைத்து பல்கலைக் கழகங்களை சேர்ந்த மாணவ மாணவியர்க்கு தங்கள் துறை சார்ந்த ஏற்ற தகவல் பக்கங்களை எழுதும் மாபெரும் போட்டியை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

<u>போட்டிக்கான விதிமுறைகள்</u>

- தகவல் பக்கங்கள் ஆதாரங்களின் அடிப்படையில் நடுநிலைமையுடன் அமைய வேண்டும். இனம், சமயம், அரசியல், தனிநபர் குறை, வேறுபாடுகள் தொடர்பாக வெறுப்பைத் தூண்டாதவாறு, தமிழ் விக்கிப்பீடியாவுக்கு ஏற்றதாக அமைய வேண்டும்.
- தகவல் பக்கங்களிலுள்ள சொற்களின் எண்ணிக்கை 250 முதல் 500 வரை அமைய வேண்டும்.
- தகவல் பக்கங்கள் ஒருங்குறியில் **(Unicode)** அமைய வேண்டும்.
- தகவல் பக்கங்கள் ஏப்ரல் 30, 2010-க்குள் நிறைவு செய்து <u>**http://tamilint2010.tn.gov.in/**</u> இணைய தளத்தில் அனுப்ப வேண்டும்.
- மேலும் விவரங்களுக்கு <u>**http://ta.wikipedia.org**</u> பார்க்கவும். தகவல் பக்கங்களை எழுதும் முன்னர் இந்த இணையதளத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைத் தெரிந்து

கொண்டு எழுத வேண்டும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் பக்கங்களை உலகளாவிய தமிழ் விக்கிப்பீடியாவில் அமைக்கப்படும்.

இப்போட்டியின் மூலம் தமிழ் விக்கிப்பீடியா தகவல் பக்கங்களின் தரம், எண்ணிக்கை உயர்வதற்கு மிகவும் ஏதுவாகவிருக்கும். மேலும் மாணவ மாணவியரிடையே தமிழ் விக்கிப்பீடியா பற்றிய ஆர்வம் அதிகரிக்க உதவியாக அமையும். போட்டியாளர்கள் தங்களது தகவல் பக்கங்களை **www.tamilint2010.tn.gov.in** எனும் இணைய தளத்திற்கு ஏப்ரல் 30, 2010-க்குள் அனுப்ப வேண்டும்.

பொருட்காட்சி

இம்மாநாட்டின் பொருட்காட்சியில் **140** சிறு அரங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. இப்பொருட்காட்சியில், தமிழக அரசின் மின் ஆளுமை திட்டங்களை செயல்படுத்தும் அரசுத் துறைகள்/நிறுவனங்கள், தமிழ் வழி கணினி மற்றும் மென் பொருள் திட்டங்களை மேம்படுத்தும் தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள், தமிழ் பத்திரிக்கையாளர்கள் மற்றும் மின் பதிப்பாளர்களின் அரங்கங்கள் அமைக்கப்படும். தமிழ் விக்கிப்பீடியாவின் செயல்முறை விளக்க கூடங்களும் இப்பொருட்காட்சியில் இடம் பெறும்.

இக்குழுவின் ஒன்பதாவது கூட்டம் இன்று (31.03.2010) தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் இணைய மாநாட்டுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன், உறுப்பினர் கவிஞர் கனிமொழி, மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர், அமைப்பாளர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர், ஒருங்கிணைப்பாளர் திரு. பி.டபுள்யூ.சி. டேவிதார், தகவல் தொழில் நுட்பவியல் துறை செயலாளர், உறுப்பினர்கள் முனைவர் பி. ஆர். நக்கீரன், இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக் கழகம், திரு. டி.என்.சி. வெங்கடரங்கன், துணைத் தலைவர், உத்தமம், திரு. ஆன்டோ பீட்டர், கணித் தமிழ் சங்கம், டாக்டர். சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு மின்னணு நிறுவனம் ஆகியோருடன் தமிழ் விக்கிபீடியா ஆர்வலர்கள் அ.இரவிசங்கர், இல.பாலசுந்தரராமன், பரிதிமதி (எ) இரவிசங்கர், தேனி எம்.சுப்பிரமணி, முனைவர் மதன்குமார், இயக்குநர், மாணவர் நலன், அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி மற்றும் மாணவர் யுவராஜ், அண்ணா பல்கலைகக்கழகம் ஆகியோரும் பங்கு பெற்றனர்.

********************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.